# இழப்பீடு பற்றிப் பேச வேண்டும்



## மேயரைச் சந்திக்க ஜின்ஜாங் செலாத்தான் தம்பஹான் மக்கள் விருப்பம்

கோலாலம்பூர், ஆக. 22- ஜின்ஜாங் செலாத்தான் தம்பாஹானைச் சேர்ந்த 560 வீடுகள், கடை லோட்டுகளின் உரிமையாளர்கள் கோலாலம்பூர் மேயருடன் சந்திப்பு நடத்தக் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தப் பகுதியில் மிகப் பெரிய வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும் நிலையில் இழப்பீடுகள் பற்றி விவாதிப்பதற்கும் அந்த இடத்தைக் காலி செய்வதற்கும் மேயருடன் சந்திப்பு நடத்த விரும்புவதாக வீடமைப்பு இழப்பீட்டுக் கோரிக்கை குழுவின் செயலாளர் அமிர்கான் வர்கத் அலி நேற்றுக் கூறினார்.

2013இல் அங்கு திட்டம் தொடங்கி ஒரு சிலருக்கு மட்டுமே

பக்கம் 13

### முதல் பக்கத் தொடர்ச்சி

*இழப்பீடு பற்றிப் பேச வேண்டும்...*

இழப்பீடு பற்றி தெரிய வந்திருக்கிறது. மற்றவர்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று அவர் கூறியதாக ஹரியான் மெட்ரோ தெரிவித்தது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் இழப்பீட்டுப் பட்டியலை அங்கு வசிப்போர் இன்னும் பெறவில்லை. ஆதலால் இழப்பீடு பெறத் தகுதி பெற்றவர்கள் யார் என்பதும் உறுதியாகத் தெரியவில்லை என்று அவர் சொன்னார். இந்த விஷயம் குறித்து மெனாரா டிபிகேஎல் கட்டடத்தில் கோலாலம்பூர் மேயர் மைமுனா ஸரிஃபின் பிரதிநிதியிடம் மகஜர் கொடுத்த பின் அவர் இதனைத் தெரிவித்தார். தங்கள் கோரிக்கைகளை மறு ஆய்வு செய்ய அங்கு வசிக்கும் மக்கள் டத்தோ பண்டாருடன் விரைந்து சந்திப்பு நடத்த விரும்புகின்றனர் என்றும் அவர் சொன்னார்.